## நாடே திரும்பிப் பார்க்கும் வகையில் தமிழ்நாட்டை முன்மாதிரி மாநிலமாக ஆக்கியவர் நம் முதல்வர்!

# மானாமதுரையில் அரசு கலைக் கல்லூரி தொடங்கிடுவீர்!

## சட்டப் பேரவையில் ஆ.தமிழரசி வலியுறுத்தல்!

**சென்னை, ஜுன் 30- “சிவகங்கை மாவட்டம் எனது தொகுதியான மானா மதுரையில் அரசு கலைக் கல்லூரி தொடங்கிட வேண்டும்” என்று சட்டப் பேரவையில் கழக உறுப்பினர் ஆ. தமிழரசி கோரிக்கை விடுத்தார்.**

சட்டப் பேரவையில் மின் துறை, மனித வள மேம்பாட்டுத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு ஆ.தமிழரசி பேசியதாவது:

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நம் கண்களை விட்டு மறைத்தாலும் நம் நெஞ்சங்களில் நிறைந்து இருக்கும் முத்தமிழ் அறிஞர் ஐயா கலைவர் அவர்கள் ஒய்வு எடுக்கும் திசையை நோக்கி தலை வணங்குகிறேன்.

எங்கள் கழகத்தின் தலைவர் தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் எப்போதும் சொல்வார்கள். நம்பர் ஒன் முதலமைச்சர் என்பதை விட நம்பர் ஒன் தமிழ்நாடு என்று சொல்லக்கூடிய நிலை வர வேண்டும் என்றால் அதை ஆட்சியில் மட்டுமல்ல அரசியலில் சாத்தியமாக்கி காத்திருப்பவர் தான் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர்.

40 தொகுதிகளிலும் வெற்றி பெற்று இந்தியாவை திரும்பி பார்க்கும் வகையில் தமிழ்நாட்டை முன்மாதிரி மாநிலமாக மாற்றி இருக்கின்ற இப்பேரவையில் எனக்கான உரிமையையும், வாய்ப்பையும் இரண்டாவது முறையாக வழங்கிய தாயுள்ளம் கொண்ட முதல்வர் அவர்களுக்கு நன்றி மலர்களை அவர் பாதங்களில் காணிக்கையாக்குகிறேன். கட்சியிலும் ஆட்சியிலும் படைத்தளபதியாக இருந்தும் இளம் தலைமுறையினர் மட்டுமல்ல அனைவரும் விரும்பும் தமிழ்நாட்டின் மூத்த பிள்ளையாக பாசிசத்தை வேறருக்கும் போர் படைத் தளபதியாக ஒன்றை செங்கல் 29. பைசா நாணய பலகை என சாமனியர்களின் மொழியில் பேசி தேர்தல் களம் ஆடி தேசிய அளவில் கவனத்தை ஈர்க்கின்ற நாளைய கட்சியையும், ஆட்சியையும் வழிநடத்த இருக்கின்ற எங்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது சிரம் தாழ்ந்த வணக்கங்கள்.

கழகத்தின் கொள்கை போராளியாக தன்னை எதிர்த்து நின்றவர் டெபாசிட் இல்லாமல் ஓட செய்த நாடாளுமன்றத்தின் சிங்ககுரல், நாடாளுமன்ற உறுப்பினர் அக்கா கனிமொழி அவர்களுக்கு அன்பான வணக்கங்கள்,

சிவகங்கை மாவட்ட கழக செயலாளர், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு வணக்கம்,

இம்மாமன்றத்தில் நான் அடி எடுத்து வைப்பதற்கு எனக்கு வாக்குகள் அள்ளி தந்த எனது மானமதுரை தொகுதி மக்களுக்கும், சிவகங்கை மாவட்ட மக்களுக்கும், கழகத்தின் தோழர்களுக்கும், முன்னோடிகளுக்கும், கூட்டணிக் கட்சி தோழர்களுக்கும், எனது தொகுதி சார்ந்த என் குழந்தை செல்வங்களுக்கும் என் நன்றியை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே,

ஐடியா மாதிரி ஒரு சக்தி வாய்ந்த காரணி எதுவும் கிடையாது. அதுவும் சரியான நேரத்தில் தோன்றும் ஐடியாக்களின் மனித இனத்தில் மாபெரும் மறுமலர்ச்சி ஏற்படுத்தியிருக்கிறது. இந்த வாசகத்திற்கு செயல் வடிவம் கொடுத்தவர். தாயுள்ளம் கொண்ட நம் முதலமைச்சர் அன்பு தளபதியார் அவர்கள்.

எல்லோரும் காவேரி நதியை வேடிக்கையாக பார்த்தார்கள். ஆனால் கரிகாலசோழனுக்கு தான் அணையை கட்டிப் பார்க்க வேண்டும் என ஐடியா வந்தது.

**அடுத்த தலைமுறைக்கான முதல்வர் நம் தளபதி!**

*Idea is Most Important*. இந்த ஐடியா தான். பல 100 ஆண்டுகளாக அவரது புகழை நிலைக்கச் செய்திருக்கிறது. அந்த வகையில் தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகளின் அறிவுதிறனை மேம்படுத்திட 30,992 அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 15,00,000 குழந்தைகள் பயன்பெறும் வகையிலும், ஊரக பகுதிகளில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 2,50,000 குழந்தைகள் பயனடையும் வகையில் காலை சிற்றுண்டி திட்டத்தை செயல்படுத்தி இருக்கின்ற முதலமைச்சர் அவர்களின் ஐடியா தான் இவர் தேர்தலுக்கான முதலமைச்சர் அல்ல. அடுத்த தலைமுறைக்கான முதலமைச்சர் என நிருபித்துள்ளார்கள்.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் பதிலுரையில் தெரிவித்ததுப் போல் இத்திட்டத்திற்கு முதலமைச்சர் அவர்களின் பெயரால் செயல்படுத்திட வேண்டும் என அவர்கள் முன்மொழிந்ததை நான் சட்டமன்ற உறுப்பினர் என்பதோடு இல்லாமல் ஒரு பெற்றோராக வரவேற்கிறேன்.

‘முதலமைச்சர். மு.க. ஸ்டாலின் காலை சிற்றுண்டி திட்டம் என பெயரிட வேண்டுகிறேன்.”

நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்தபட்சத்தில் கல்வி, உள்கட்டமைப்பு, சமூகநலன் கலாச்சாரம். பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளை உள்ளடக்கிய நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்தார்.

இதில் வறுமை ஒழிப்பிற்கான முதலமைச்சர் தாயுமாணவர் திட்டம் அதைப் போல் மாதம் ரூ. 1000 வழங்கும் தமிழ் புதல்வன் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. வருவாய் பற்றாக்குறை தமிழ் ழ்நாட்டில் சென்னை மற்றும் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகளினால் மாநிலத்தில் சொந்த வருவாயை செலவிட நேர்ந்தது. இதனால் மாநிலத்தில் வருவாய் பாதித்தது.

மேலும் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு முன் எப்போதும் இல்லாத அளவிற்கு நிதி உதவி அளித்ததினால் அதிக வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டது. ஆனால் அதே நேரத்தில் 2023-2024ம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ரூ. 28.3 லட்சம் கோடி என இருந்தது. இது இந்திய அளவில் தமிழ்நாடு 2வது இடமாகும்.

நமது முதல்வர் அவர்கள் ஏழை எளியோருக்கு சமூகநலத் திட்டங்களை செயல்படுத்துவதின் மூலம் மாநிலத்தின் வளர்ச்சியைக் காண முடிகிறது. பிரத மரின் பொருளாதார ஆலோசனை குழு, சமூக முன்னேற்ற குறியீட்டில் 2023ல் தமிழ்நாடு முதலீடத்தை பெற்றுள்ளது.

**மக்களின் அத்தியாவசிய தேவை மகளிர் உரிமைத் தொகை திட்டம்!**

சமூக நலன் திட்டங்கள் மூலமாக கணிசமான பலன்களை நாம் பெற்றிருக்கிறோம். தேசிய சாரசாரி மாத நுகர்வுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின் சராசரி நுகர்வு மாதம் அதிகமாகும். இதற்கு காரணம் கலைஞரின் மகளிர் உரிமைத் தொகை திட்டம்.

(விலைவாசி ஏற்றத்தை சமாளிக்க அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய இது உதவுகிறது)

கணிசமான தொகை வெளியேற்றம் இருந்தபோதிலும் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலமாக தமிழ்நாடு தான் சொந்த வருவாயை வெற்றிகரமாக திரட்டியுள்ளது.

**மாநிலத்தின் வருவாய் இனங்கள்**

தமிழ்நாட்டில் மொத்த வருவாய் வரவினங்கள் 75.6 சதவீதம், மாநிலத்தின் சொந்த வருவாய் ஆகும். மீதம் உள்ள 25.4 சதவீதம் ஒன்றிய வரிகளில் பங்கு மற்றும் ஒன்றிய அரசிடமிருந்து பெறும் மானியங்கள் ஆகும்.

வருவாய் செலவினம்

வருவாய் செலவினத்தின் பெரும் பகுதி பொதுமக்களுக்கானது. குறிப்பாக ஏழை எளியோருக்கு பல்வேறு நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் அன்பு தளபதியார் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பு ஏற்று கொண்ட நேரத்தில் நிதி பற்றாக்குறை என்பது 4.9 சதவீதம். நம் முதலமைச்சர் அவர்களின் நிர்வாக திறமையால் நிதி பொறுப்புடைமை, சட்டத்திற்குட்பட்டு இன்று நிதி பற்றாக்குறை 3.4, 5 சதவீதம் குறைந்துள்ளது.

ஆனால் அதே நேரத்தில் ஏழை எளியோருக்கு வழங்கப்பட்டுள்ள திட்டங்கள் எவ்வித இடையூறும் இன்றி தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

**மூலதன செலவினங்கள்**

மூலதன செலவினங்கள் பொருளாதார பணிகளுக்கு செலவிடுதல் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கான ஊந்துதலை அளிக்கிறது

2024-2025ம் ஆண்டிற்கான மூலதன செலவு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடு என்பது கடந்த ஆண்டைவிட 12.1 சதவீதமாக உயர்த்தப் பட்டுள்ளது.

மூலதன செலவினங்களுக்கான நிதியை தொழில் வளர்ச்சியின் மூலம் திரட்டி வருகிறது நம் திராவிட மாடல் அரசு.

இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் எலக்ட்ரானிக் ஏற்றுமதியில் முதன்மை மாநிலமாக இருக்கிறது. அது போல உலக முதலீட்டாளர்கள் மாநாடு மூலமாக ரூ. 6 லட்சம் கோடி மதிப்பிலான முதலீடுகளை ஈர்த்துள்ளது. அதே சமயத்தில் நிதி பற்றாக்குறை இருந்தப் போதிலும் மக்களுக்கான பல்வேறு திட்டங்களை தீட்டி திரள்சார்ந்த முதலீடு களையும் செயல்திறன்மிக்க பொருளாதார நிர்வாகத்தினை தந்த நிதியமைச்சர் அவர்களுக்கும், நிதித்துறை செயலாளர் உதயசந்திரன் அவர்களுக்கும் எனது வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

**‘நம் முதல்வர் அவர்களுக்கு ஒரு கனவு உண்டு.**

**தாயுள்ளம் கொண்ட முதல்வர் அல்லவா,**

**அவர் காணும் கனவு தமிழ் கனவு”**

வானவில்லின் வண்ணங்களை போன்று 7 முதன்மையான நோக்கங்களை அடிப்படையாக கொண்ட தமிழ் கனவு அது. இக்கனவின் சிற்பி யார் தெரியுமா?

நம் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 - 68ம் ஆண்டுகளில் நிதியமைச்சராக இருந்தப் போது வரவு செலவு திட்டத்தின் மீதான விவாதத்தின் மீது இந்த வரவு செலவு திட்டம் 3.5 கோடி மக்களுடைய வாழ்வும், தாழ்வும் இந்த 64 பக்கங்களில் அடங்கியிருக்கிறது. நம்முடைய இதயமும் நம்மை தேர்ந்தெடுத்த மக்களின் லட்சியங்கள் இதில் தான் அடங்கி இருக்கின்றன என்று குறிப்பிட்டார்.

பேரறிஞர் அண்ணாவின் லட்சியத்தோடு நம் தாயுள்ளம் கொண்ட முதல்வரின் கனவு

**1) சமூகநீதி**

**2) கடைக்கோடி தமிழரின் நலன்,**

**3) உலகை வெல்லும் இளைய தமிழகம்.**

**4) அறிவுசார் பொருளாதாரம்**

**5) மகளிர் நலன் காக்கும் சமத்துவ பார்வை.**

**6) பசுமை வழிப்பயணம்.**

**7) தாய், தமிழும் தமிழர் பண்பாடு**

தனது லட்சிய தமிழ் கனவோடு தமிழ்நாட்டை வழிநடத்தி வருபவர் தான் திராவிட மாடல் முதலமைச்சர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை கொண்டாடும் வேலையில் ஐயா கலைஞர் வழியில் திராவிட மாடல் அரசு செம்மாந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை தொழில்நுட்ப பூங்கா மூலமாக உருவாக்கினார்கள். அதேப் போல் நம் முதல்வர் அவர்கள் Regional disparity பிராந்திய சமநிலை மனித விழுமியங்களான சகோதரத்துவம், ஒற்றுமையுணர்வும் சிதைக்க கூடிய காரணி பொருளாதார ஏற்றத்தாழ்வு. இந்தியாவில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டு பார்க்கும் பொழுது தமிழ்நாடு அதிகமாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்க கூடிய மாநிலமாகும்.

**சாதியின் பெயரிலான கட்சிகள் இனி இருக்காது!**

ஆனால் அதே வேளையில் *With In The District Despairing* என்பது அதிகம். (மாவட்டங்களுக்கு இடையேயான சம வளர்ச்சியை உருவாக்கிட) இதை சமநிலைப்படுத்த வேண்டும் என நம் முதல்வரின் தமிழ் கனவான கடைக் கோடி தமிழர்களில் தமிழ் கனவான கடைக் கோடித் தமிழர் நலன் அடிப்படையாகக் கொண்டு மினி டைட்டல் பூங்கா விழு ப்புரத்தில் திறக்கப்படவுள்ளது.

தமிழ்நாட்டில் தொழில்வளர்ச்சி அடைகின்ற போது இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் போது அனைத்து இளைஞர்களும் ஒன்றாக இணைந்து பணியாற்றுவார்கள். சாதிய உணர்வு இன்றி ஒற்றுமையோடு பயணிப்பார்கள். எல்லோரும் சமம் என்ற நிலை உருவாகும். சாதியின் பெயரால் அரசியல் கட்சி நடத்துபவர்களுக்கு தமிழ் நாட்டில் இனி வேலை இல்லை என்ற நிலை ஏற்படும். வேங்கை வயல் போன்ற இழிவு செயல்கள் இம்மண்ணின் மனங்களில் இருந்து அழியும். இதை வைத்து அரசியல் வைத்து நடத்துபவர்கள் இம்மண்ணில் இல்லாமல் போவார்கள்.

பிராந்திய சமநிலையைப் பற்றி சிந்தித்த ஒரே தலைவர், ஒரே முதலமைச்சர் நம் திராவிட அரசின் முதலமைச்சர் தான். அதனின் தொடர்ச்சி தான் சென்னை மாநகரின் சமசீர் வளர்ச்சியை உறுதி செய்ய வடசென்னை வளர்ச்சித்திட்டம் புதிய முயற்சியில் ரூபாய் 1000 கோடியில் இந்தியாண்டில் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

**இளைஞர்களே தமிழ்நாட்டின் வளம்!**

மனித வளமேம்பாடு மக்கள் தொகை ஈவு என்று சொல்லக்கூடிய demographic dividend, ஒருநாட்டின் மக்கள் தொகையின் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றத்தால் பொருளாதார வளர்ச்சி ஆகும். தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகையில் 74 சதவீதம் நபர்கள் 15 முதல் 35 வயது வரை உள்ள நபர்கள் ஆவார்கள். இந்த மனித ஆற்றலை நாட்டின் வளமாக மாற்ற திராவிட மாடல் அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.



தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பின்மை 3.2 சதவீதம் இருந்து 2.4 சதவீதமாக குறைந்துள்ளது. நகர்ப்புரங்களில் 6.3 சதவீதத்தில் இருந்து 5.4 சதவீதமாக குறைந்துள்ளது. கல்வி மட்டுமே சமத்துவம் மலரச் செய்யும் மிகப்பெரிய ஆயுதம் என்றார் முத்தமிழ் அறிஞர். கல்லூரிகளில் புதிய திறன் பயிற்சி கட்டமைப்பிற்கு ரூ.200 கோடி ஒதுக்கீடு பொது நூலகங்களில் கட்டமைப்பு வசதிக்கு ரூ.213 கோடி ஒதுக்கீடு, 10 புதிய அரசு பயிற்சி நிறுவனங்கள் அமைக்க ரூ. 111 கோடி.

இயந்திர வழி கற்றல், செயற்கை நுண்ணறிவு, தொழில்நுட்பங்களை உருவாக்கிட புது தொழில் நிறுவனங்களுக்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு

ஒரு லட்சம் மாணவர்களுக்கு கல்வி கடன், தமிழ்நாடு செயற்கை நுண்ணறிவு இயக்கம் என திராவிட மாடல் என முதலமைச்சர் அவர்களின் தமிழ் கனவான உலகை வெல்லும் இளைய தமிழகம் விளையாட்டு போட்டிகளில் தலைமையாக தமிழ்நாட்டை மாற்றிட ஒரு லட்சிய வேர்க்கையுடன் இளைஞர்; நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்,

**அனைவரின் வளர்ச்சியே திராவிட மாடலின் தாரக மந்திரம்!**

ஒலிம்பிக் பதக்க வெற்றியாளர்களை உருவாக்கிட சென்னை, மதுரை, திருச்சி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 4 ஒலிம்பிக் பயிற்சி மையங்கள் உருவாக்க இருக்கிறார். அனைவரும் உள்ளடக்கிய வளர்ச்சியே திராவிட மாடல் அரசின் தாரக மந்திரம்.

இம்முயற்சியின் ஒரு பகுதியாக மாற்றுதிறன் படைத்த விளையாட்டு வீரர் வீராங்கனைகளின் திறமையை மேம்படுத்திட இந்தியாவிலேயே முதன் முறையாக மாற்றுத் திறனாளிகளுக்கு 6 விளையாட்டு மையங்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உருவாக்க இருக்கிறார்கள்.

உலக புத்தொழில் மாநாடு 2025ம் ஆண்டு சென்னையில் நடக்கவுள்ளது. 110வது விதியின் கீழ் நம் முதல்வர் அவர்களின் அறிவிப்பு இன்று அனைத்து பத்திரி கைகளிலும் தலையங்கமாக வந்துள்ளது.

அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திக்கும் திராவிட மாடல் அரசில் 18 மாதங்களுக்குள் 75,000 பணியிடங்கள் நிரப்பப் படும் என்று நம் திராவிடர் மாடல் அரசினை வடிவமைத்து கொண்டிருக்கும் நம்பர் ஒன் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆவார். அவர்களுக்கு கீழ்க்கண்ட கவிதை வரியை சொல்லி நிறைவு செய்கிறேன்.

**கவிஞர் பிராமிளாவின் கவிதை வரிகள்**

திரும்பி பார்க்க வைக்கும் முகம் எல்லோருக்கும் இருக்கும்.

ஆனால் திரும்ப நினைக்க வைக்கும் குணம் ஒரு சிலருக்கும் மட்டுமே இருக்கும்.

அது எங்கள் திராவிட மாடல் முதலமைச்சருக்கே என்று நன்றி கூறி நிறைவு செய்கிறேன்.

மேலும் எனது தொகுதியின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1) மானாமதுரை அரசு கலைக் கல்லூரி திட்டம்

2) சுப்பன் கால்வாய் திட்டம் (மானாமதுரை முதல் இளையான்குடி வரை)

3) முக்குடி கம்பிக்குடி கால்வாயினை தூர்வாரு தல்

4) திருப்புவனத்தில் இந்து அறநிலையத்துறையின் கீழ் உள்ள இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அனுமதித்தல் (அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி அருகில்

5) மடப்புரம் வைகை ஆற்றின் கரையோரம் பலப்படுத்தி நடைபாதை அமைத்தல்

6) கீழடி சுற்றுலாத் தலமாக மாறி வருவதால் அங்கு மின் தூக்கி நடை பாதை அமைத்தல்.

7) கீழடிக்கு அதிக பயணிகள் வந்து செல்லும் வண்ணம் கீழடிவரை தனி பேருந்து இயக்குதல்

8) மானாமதுரை நகராட்சிக்கு உட்பட்ட கிருஷ்ணராஜபுரம் பகுதியில் புதிய எரிவாயு தகன மேடை அமைத்தல்.

9) மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட முத்தனேந்தல் கிராமத்தில் அரசு ஆரம்ப பள்ளி தொடங்குதல்.

10) மானாமதுரை பரமக்குடி மற்றும் மதுரை ராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் வைகை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம்

11) மானாமதுரை நகராட்சியில் அடுக்குமாடி குடியிருப்புகள் ஏற்படுத்துதல்

12) மானாமதுரை மற்றும் இளையான்குடி பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் அரசு மாணவர் மற்றும் மாணவியர் விடுதி ஏற்படுத்துதல்.

13) இளையான்குடி தாயமங்கலம் முத்து மாரியம்மன் கோயிலில் பக்தர்கள் அமரும் இடம் மற்றும் திருமண மண்டப வசதி ஏற்படுத்தித் தருதல்.

14) இளையான்குடியில் வாழ்ந்த நம்மாழ்வார் திருஉருவச் நிலையை நிறுவி சுற்றுலாத்தலமாக மாற்றுதல்.

15) தரம் உயர்த்தப்பட்ட மானாமதுரை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகளான கழிவுநீர் வாய்க்கால் மற்றும் வார்டு பகுதிகளில் புதிய சாலை அமைத்தல்.

16) மானாமதுரை ரயில்வே நிலையம் அருகில் ரயில்வே தண்டவாளத்தை கடக்கும் மேம்பாலம் அமைத்தல்.

17) மாமனாமதுரையை மையமாகக் கொண்டு இளையான்குடி திருப்புவனம் ஆகியவற்றை இணைத்து மானாமதுரை வருவாய் கோட்டம் உருவாக்கித் தருதல்.

18) மானாமதுரை சட்டமன்றத் தொகுதி ராஜகம்பீரம் கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தி தருதல்.

19) சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் ஒன்றியம், 1.மாங்குடி அம்பலத்தடி, 2. ராங்கியன், 3.டி.புளியங்கும், 4.சங்கங்குளம், 5.ஓடாத்தூர்) இந்த கண்மாய்கள் ஏற்கனவே கிருதுமால் நதியில் உள்ளது.

தற்பொழுது (வைகை அணை) விரகனூர் மதகு அனை ஆயக்காட்டில் சேர்க்கவும்

20) இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்தை பிரித்து சாலை கிராமத்தை மையமாக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் உருவாக்குதல்

(பூலாங்குடி, சாத்தனூர், புதுக்கோட்டை, சீவலாதி, முத்தூர், சமுத்திரம், கட்டணூர், வண்டல், அளவிடங்கான், விஷவனூர், கல்லடிதிடல், ஆக்கவயல், சூராணம், உதயனூர், கலங்கநாதன் கோட்டை, அரண்மனை கரை, வடக்கு கீரணூர், அரியாண்டிபுரம், தெற்கு கீரணூர், இடையவலசை, அண்டக்குடி, கோட்டையூர், புலியூர், துகவூர்)

21) திருப்புவனம் பழையனூரை மையமாகக் கொண்டு புதிய பிர்கா (உள் வட்டம்) உருவாக்குதல்.

இவ்வாறு ஆ.தமிழரசி பேசினார்.

---

### விக்கிரவாண்டி இடைத்தேர்தல் - காணை தெற்கு ஒன்றிய - தேர்தல் பொறுப்பாளர்

## பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் - திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி - டாக்டர் இரா. இலட்சுமணன் எம்.எல்.ஏ. சுற்றுப்பயண விவரம்!

| தேதி | ஊராட்சி | ஊராட்சி பொறுப்பாளர்கள் | நேரம் | பாக எண் |
|---|---|---|---|---|
| 29.6.2024 | கல்பட்டு | மு.மதிவாணன் | ஐந்து பாகத்தில் தேர்தல் பணிமனை திறப்பு விழா மாலை 05.00மணி | 69,70,71 |
| | சிறுவாக்கூர் | | | 72,73 |
| 30.6.2024 | மாம்பழப்பட்டுகாலனி மாம்பழப்பட்டு ஒட்டன்காடுவெட்டி | சு. முத்துசாமி எஸ்.கல்யாணசுந்தரம் பூண்டி கலைவாணன் | காலை 7.00 மணி | 63, 68 64, 65 66, 67 |
| 30.6.2024 | மல்லிகைப்பட்டு / கோழிப்பட்டு காலனி கோழிப்பட்டு / கொண்டியங்குப்பம் / கூடலூர் / டட் நகர் | சு. முத்துசாமி ந. சிற்றரசு | மாலை4.00மணி | 63 61,62 58,59 |
| 1.7.2024 | கருங்காலிப்பட்டு / கருங்காலிப்பட்டு காலனி / கானை காலனி / வைலாமூர் / குப்பம் காலனி / குப்பம் | பத்மநாபன் துரை.சந்திரசேகர் கௌதமன் | மாலை4.00மணி | 74,75 126,127,128,129 124,125 |
| 2.7.2024 | காங்கேயனூர் காலனி / காங்கேயனூர் / பொன்னங்குப்பம் / பள்ளியந்தூர் காலனி / பள்ளியந்தூர் | கோவிந்தராஜ் அண்ணாதுரை | காலை 7.00 மணி | 76,77 78, 79 |
| 2.7.2024 | வீரமூர் / புதுப்பாளையம் / கெடார் மெயின் ரோடு / கெடார் ஊர் / கெடார் காலனி / பொன்னங்குப்பம் | ந. சிற்றரசு மா.சுப்ரமணியன் | மாலை4.00மணி | 86,87,88 80,81,82,83,84 |
| 3.7.2024 | சிறுவாக்கூர் காலனி / சிறுவாக்கூர் / ராகவன்பேட்டை / சௌரிநாயக்கன்பேட்டை / கல்பட்டு காலனி / கல்பட்டு / நத்தமேடு / புதூர் | மு.மதிவாணன் | காலை 7.00 மணி | 72,73 69,70,71 |
| 4.7.2024 | கோழிப்பட்டு மல்லிகைப்பட்டுமாம்பழப்பட்டு கல்பட்டு சிறுவாக்கூர் மாம்பழப்பட்டு | சு. முத்துசாமி எஸ்.கல்யாணசுந்தரம் பூண்டி கலைவாணன் மு.மதிவாணன் | வேட்பாளர் வாக்கு சேகரித்தல் காலை 7.00 மணிமுதல் இரவு10.00மணி வரை | 61,62,63,68,69,70,71,72,73,64, 65,66,67 |
| 5.7.2024 | கல்பட்டு | மு.மதிவாணன் | காலை 7.00 மணி | 69 இல்லந்தோறும் சென்று வாக்குச் சேகரித்தல் |
| 5.7.2024 | சிறுவாக்கூர் | மு.மதிவாணன் | மாலை4.00மணி | 73 இல்லந்தோறும் சென்று வாக்குச் சேகரித்தல் |
| 6.7.2024 | கல்பட்டு | மு.மதிவாணன் | காலை 7.00 மணி | 71 இல்லந்தோறும் சென்று வாக்குச் சேகரித்தல் |
| 6.7.2024 | உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம் | | மாலை 4.00 மணிமுதல் இரவு10.00மணி வரை | |
| 7.7.2024 | கல்பட்டு | மு.மதிவாணன் | காலை 7.00 மணி | 70 இல்லந்தோறும் சென்று வாக்குச் சேகரித்தல் |
| 7.7.2024 | சிறுவாக்கூர் | மு.மதிவாணன் | மாலை 4.00 மணி | 72 இல்லந்தோறும் சென்று வாக்குச் சேகரித்தல் |
| 8.7.2024 | கானை தெற்கு ஒன்றிய அனைத்து ஊராட்சிகளில் வாக்குச் சேகரித்தல் | | காலை 7.00 மணிமுதல் மாலை05.00மணி வரை | |